# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

<u>ஆணை எண். 172/ந/2025, நாள் 24.12.2025</u>

ஆ. சக்திவேல்,
விருதுநகர், விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
விருதுநகர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், அய்யனார் நகர், கதவு எண்.8/297 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆ. சக்திவேல் என்பவரது 02.04.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2025 அன்று பெறப்பட்டு, 172/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், அய்யனார் நகர், கதவு எண்.8/297 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆ. சக்திவேல் என்பவரின் 02.04.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"விருதுநகர் நகராட்சி எல்லைக்குள் அரசு மருத்துவ கல்லூரி செல்லும் சாலையில் அரசு அனுமதியின்றி ஆபத்தான நிலையில் செயல்பட்டு வருகிறது சம்பந்தமாக நான் விருதுநகர் நகராட்சி ஆணையருக்கு மனு அனுப்பியிருந்தேன். அதன்படி 04.12.2024 அன்று நகராட்சிக்கு உரிய ஆவணம் அனுப்பி இந்நாள் வரை நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், திருப்பூர் காட்டன் மேலா ஜவுளிக்கடை வாகன பார்க்கிங் வசதி உண்டு எனவும் கடித எண்.7477/2024/எப்1-ன்படி 07.03.2025 திருப்பூர் காட்டன் இரு சக்கர வாகன நிறுத்தம் இடம் உள்ளதாக தவறான பதில் கடிதம் கொடுத்து வருகின்றனர்.

மேலும், விருதுநகர் நகராட்சி T.P.I. ரூபா அவர்களின் உதவியாளர்கள் நகராட்சி அலுவலரிடம் தவறான செய்திகள் சொல்லிகொண்டு, மேலும் நகராட்சி எல்லையில் செயல்படும் அனைத்து கடைகளிலும் லஞ்சம் பெற்றுக்கொண்டு ஆபத்தான நிலையிலும், நகராட்சி அனுமதி இல்லாமல் செயல்படும் இந்து அறநிலையத் துறைக்கு பாத்தியபட்ட கடைகள், மதுரை ரோட்டில் உள்ள ஸ்ரீ குமரன் நகை கடை, இரயில்வே பீடர் ரோட்டில் உள்ள தங்கமயில் நகைக்கடை, சண்முகம் பர்னீச்சர், இந்து அறநிலையத்துறை புதிய 3 மாடி கட்டிடம், மெயின் பஜாரில் உள்ள பராசக்தி மாரியம்மன் பலசரக்கு கடை, புல்லக்கோட்டை ரோட்டில் உள்ள சத்யா ஏஜென்சி, மேலும் நகராட்சி எல்லையில் உள்ள கல்யாண மண்டபங்கள், ஜவுளிக் கடைகள் அனைத்தையும் நில அளவைகள் செய்து தீர்வை ரசீது போன்று அரசுக்கு வருமானம் ஏற்பாடு செய்யாமல் நகராட்சிக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவரும், VMC ரூபா TPI அவர்களது உதவியாளர் மேலும் திருப்பூர் காட்டன் மேலா மீது ஆய்வு செய்யாமல் மேலே உள்ள நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கடைகள்மீது உரிய நடவடிக்கை எடுக்காமல், போலி தீயணைப்பு சான்று கொடுக்கும் தீயணைப்பு மாவட்ட உதவி அலுவலர் திரு. க.ப. பாலமுருகன் அவர் கொடுத்த ஆவணம் ஆய்வு செய்து திருப்பூர் காட்டன் கடை மீது கடும் நடவடிக்கை எடுக்க ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்".

2) மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் விருதுநகர் நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3) விருதுநகர் நகராட்சி ஆணையரின் அறிக்கை கடிதம் ந.க.எண்.7477 / 2024/ எப்1 , நாள் 24.09.2025 –ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"12.02.2025 நாளிட்ட அறிவிப்பில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம், 1972) பிரிவு 56(1) ன் படி விபரங்கள் சமர்ப்பிக்க தெரிவித்து படிவம்–1 வழங்கப்பட்டுள்ளது.

அதை தொடர்ந்து 28.02.2025 நாளிட்ட அறிவிப்பில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56(1) ன் படி நேராய்வு செய்ய வருவதை தெரிவித்து படிவம் – 2 வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் காட்டன் கடை உரிமையாளரின் 06.03.2025 நாளிட்ட கடிதத்தில் திருப்பூர் காட்டன் கடையானது தற்காலிக கூரை அமைத்து நடத்தி வருவதாகவும், கட்டிடமோ அல்லது சுற்றுச் சுவர் கட்டி கடை நடத்தவில்லை எனவும், தற்காலிக தகர செட்டுக்கு கட்டிட அனுமதி பெற இயலாத காரணத்தினால் கடை நடத்திக் கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இவ்வலுவலக 20.03.2025 நாளிட்ட அறிவிப்பு கடிதத்தில் மேற்படி கடையானது தற்காலிக தகரசெட் அமைத்து வணிக ரீதியான பயன்பாட்டில் உள்ளதாலும், மக்கள் வந்து செல்லக்கூடிய நிலையில் உள்ளதாலும், உரிய கட்டிட அனுமதி பெற விண்ணப்பிக்குமாறு தெரிவித்து அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் காட்டன் உரிமையாளரின் 30.04.2025 நாளிட்ட கடிதத்தில் இக்கடையானது தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் தகர செட் அமைத்து நடத்தி வருவதாகவும், இட உரிமையாளரிடம் தெரிவித்து கட்டிட அனுமதி பெறுவதற்கு அல்லது கடையினை காலி செய்வதற்கும் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு 3 மாதம் அவகாசம் வழங்குமாறும், இடைப்பட்ட காலத்தில் ஏதேனும் எதிர்பாரா நிகழ்வுகள் ஏற்பட்டால் முழுப்பொறுப்பு ஏற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் காட்டன் உரிமையாளர் மேற்படி 3 மாத கால அவகாசத்திற்குள் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், கடையினையும் காலி செய்யாமல் நாளது தேதி வரை இயங்கி வருவதால் 08.09.2025 நாளிட்ட அறிவிப்பில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம், 1972) பிரிவு 56 (2A) ன் படி அனுமதியற்ற கட்டுமானத்தினை அகற்ற தெரிவித்து படிவம் 3 வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான விருதுநகர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 11.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. ஆ. சக்திவேல் என்பவர் 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார். அதில்–

"1. விருதுநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவ கல்லூரிக்குச் செல்லும் ராமமூர்த்தி சாலையில் தற்காலிக ஷெட்டில் இயங்கிவரும் திருப்பூர் காட்டன் மற்றும் மதுரை ABC காட்டன் கடைகள் பார்க்கிங் வசதியின்றியும், பொதுமக்களுக்கு இடைஞ்சலாகவும், ஆம்புலன்ஸ் கூட செல்லமுடியாத வகையில் செயல்பட்டு வருகிறது. இதனை அகற்றிட நகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2. விருதுநகர் நகராட்சி எல்லைக்குள் இயங்கிவரும் வசந்த் & கோ, வாகன நிறுத்துமிடம் (Parking place) இன்றி செயல்பட்டு வருகின்றது. இதற்கும் நகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

3. புளுகானூரணி அரசு புறம்போக்கு நிலத்தில் இந்து அறநிலையத் துறையின் நான்கு மாடி வணிக வளாகக் கட்டிடம் உள்ளது. இதனை நில அளவைகள் செய்து அரசுக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்காமல் விருதுநகர் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

மேற்கண்ட புகார்கள் மீது மாண்புமிகு முறைமன்ற நடுவர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) எதிர்மனுதாரராகிய விருதுநகர் நகராட்சி ஆணையர் (பொ) செல்வி. மா. சுகந்தி மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் திருமதி ச. ரூபா ஆகியோர் 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர். அதில்–

"1. மனுதாரர் விருதுநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவ கல்லூரிக்குச் செல்லும் ராமமூர்த்தி சாலையில் தற்காலிக ஷெட்டில் இயங்கிவரும் திருப்பூர் காட்டன் மற்றும் மதுரை ரோடு ABC காட்டன் கடைகள் பார்க்கிங் வசதியின்றியும் பொது மக்களுக்கு இடைஞ்சலாகவும், ஆம்புலன்ஸ் கூட செல்லமுடியாத வகையில் செயல்பட்டு வருகிறது. இதனை அகற்றிட நகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என புகார் தெரிவித்திருந்தார். திருப்பூர் காட்டன் கடை செயல்படுவது குறித்து மாவட்ட உதவி அலுவலர், தீயணைப்புத் துறையால் தடையின்மைச் சான்று மேற்படி கடையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடை தற்காலிக ஷெட்டில் செயல்படுவதால் அக்கடைக்கு நகராட்சியால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 56 (1) கீழ் பிளான் அப்ரூவல் வழங்கப்பட்ட விவரத்தினை சமர்ப்பிக்ககோரி அறிவிப்பு எண் 1 மற்றும் 2 வழங்கப்பட்டது.

2. மேற்படி அறிவிப்பிற்கு பதில் பெறப்படாததால் மேற்படி சட்டம், பிரிவு 56 (2-A)-ன் கீழ் நகராட்சி அலுவலகத்திலிருந்து மூடி முத்திரையிடுவதற்கான அறிவிப்பு எண். 1, 2 மற்றும் 3 நகராட்சியால் வழங்கப்பட்டது.

3. மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள வசந்த் அன்டு கோ என்ற கடைக்கும் மேற்படி சட்டம், பிரிவு 56 (2–A)-ன் கீழ் மூடி முத்திரையிட அறிவிப்பு எண். 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டுள்ளது.

4. அதே போன்று இந்து அறநிலையத் துறையால் கட்டப்பட்டுள்ளது என புகாரில் தெரிவிக்கப்பட்ட இடமானது அருள்மிகு சொக்கநாதர் சுவாமி கோயில் அர்த்தஜாம கட்டளைக்கு பாத்தியப்பட்டது. மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மேற்படி சட்டம், பிரிவு 56 (2–A)-ன் கீழ் மூடி முத்திரையிட அறிவிப்பு எண் 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தெரிவித்துள்ள புகார் உறுதி செய்யப்பட்டதால் நகராட்சியால் மேற்படி கடைகளை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்து கொள்கின்றோம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான விருதுநகர் நகராட்சி ஆணையர் (பொ)–இன் அறிக்கை, விருதுநகர் நகராட்சி ஆணையர் (பொ) மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

விருதுநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவ கல்லூரிக்குச் செல்லும் ராமமூர்த்தி சாலையில் திருப்பூர் காட்டன் கடை முறையான அனுமதி பெறாமல் தற்காலிக ஷெட்டில் இயங்கிவருவதும், மதுரை ரோடு, ABC காட்டன் கடைகள் மற்றும் வசந்த் & கோ நிறுவனம் ஆகியன பார்க்கிங் வசதிகளின்றி செயல்பட்டு வருவதும், இந்து அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட கடைகள் மற்றும் இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான புதிய 3 மாடி கட்டிடம், மதுரை ரோட்டில் உள்ள ஸ்ரீ குமரன் நகை கடை, இரயில்வே பீடர் ரோட்டில் உள்ள தங்கமயில் நகைக்கடை, சண்முகம் பர்னீச்சர், மெயின் பஜாரில் உள்ள பராசக்தி மாரியம்மன் பலசரக்கு கடை, புல்லக்கோட்டை ரோட்டில் உள்ள சத்யா ஏஜென்சி, கல்யாண மண்டபங்கள், ஜவுளிக் கடைகள் போன்றவற்றிக்கு நகராட்சியால் நில அளவை செய்து தீர்வை ரசீது போடப்படாததால் நகராட்சிக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்திருப்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

தற்காலிக ஷெட்டில் செயல்பட்டு வரும் திருப்பூர் காட்டன் கடைக்கு தீயணைப்புத் துறை, மாவட்ட உதவி அலுவலர் மூலம் வழங்கப்பட்ட தடையின்மைச் சான்று திருப்பூர் காட்டன் கடையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், பிளான் அப்ரூவல் வழங்கப்பட்ட விவரத்தினை சமர்ப்பிக்ககோரி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 (1)–ன் கீழ் அறிவிப்பு எண் 1 மற்றும் 2 வழங்கப்பட்டது என்பதும், மேற்படி அறிவிப்புகளுக்கு பதில் பெறப்படாததால் திருப்பூர் காட்டன் கடையை மேற்படி சட்டம், பிரிவு 56 (2-A)-ன் கீழ் மூடி முத்திரையிடுவதற்கான அறிவிப்பு எண். 1, 2 மற்றும் 3 நகராட்சி அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்பதும், அவ்வாறே வசந்த் அன்டு கோ கடைக்கும் மேற்படி சட்டம், பிரிவு 56 (2–A)–ன் கீழ் மூடி முத்திரையிட அறிவிப்பு எண். 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டுள்ளது என்பதும், இந்து சமய அறநிலையத் துறையால் கட்டப்பட்டுள்ள கடைகள் என புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள கடைகள் அருள்மிகு

சொக்கநாதர் சுவாமி கோயில் அர்த்தஜாம கட்டளைக்கு பாத்தியப்பட்டது என்பதால், மேற்படி கடைகளுக்கும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 (2–A)–ன் கீழ் மூடி முத்திரையிட்ட அறிவிப்பு எண் 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டுள்ளதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில்,

1) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971ன் படியும், மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்ற அறிவுறுத்தல்களின் படியும் விருதுநகர் நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளவும், விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கல்யாண மண்டபங்கள், ஜவுளிக் கடைகள் போன்றவற்றை முறையாக அளவீடுகள் செய்து தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளின்படி வரி விதித்திட விருதுநகர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2) மேலும், இது குறித்து திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலம் ஆய்வு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், ஆய்வறிக்கையின் அடிப்படையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட வரிவிகிதங்களில் முறைகேடுகள் கண்டறியும்பட்சத்தில், அதற்கு காரணமான நகராட்சி அலுவலர்கள் மீதும், அனுமதியற்ற கட்டிடங்கள் மீது இதுநாள் வரை நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்த அலுவலர்கள் மீதும் துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 24–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ஆ. சக்திவேல், த/பெ. ஆறுமுகம்,
   கதவு எண்.8/297, அய்யனார் நகர்,
   விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   விருதுநகர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.